# நாடாள்வோர்க்கு நடுநிலைமையில் நாட்டமில்லை

Phone No 4502 | விலை அரை அணா | Regd. No. M. 5458 | இலங்கை 5 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. | MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (24—2—50) | வெளியூர் (25—2—50) [இதழ் 177

## ஊழல்களை மறைத்து ஓரவஞ்சனை செய்தனர்!

## விசாரணையும் விளக்கமுமில்லா விபரீதத் தீர்ப்பு!

### யதேச்சாதிகாரத் தீர்ப்பு கண்டு ஏமாற்றம் அடைந்தேன்

### முன்னாள் அமைச்சர் தோழர் பிரகாசம் அறிக்கை

"காங்கிரஸ் துணைக் குழுவினால், சென்னை மந்திரி சபை ஊழல்கள் பற்றி அளிக்கப்பட்டிருக்கும் தீர்ப்பு சாட்டப்பட்டுள்ள குற்றங்களை ஆராய்ந்து அளிக்கப்பட்ட தீர்ப்பாக இல்லை. குற்றங்குறைகளை எடுத்துக் காட்டியவர்கள், அவற்றை நிரூபித்துக்காட்ட எத்தகைய சந்தர்ப்பமும் அளிக்கப்படவில்லை. இது காங்கிரஸ் துணைக் குழு செய்த பெரிய தவறாகும், அதிலும் பல அம்சங்களில், மந்திரிசபை ஊழல்களை விளக்கிக்காட்ட விளக்கங்கள் தயாராக உள்ளன என்று ஏற்கனவே கூறப்பட்டிருந்தும், அது கவனிக்கப்படாமற்போனது மிகப் பெரிய தவறாகும்.

சங்கர்ராவ்தேவின் விசாரணையை வைத்துக் கொண்டு, காங்கிரஸ் தலைவரால் ஆரம்பிக்கப்பட்ட விசாரணை ஒருதலைப் பக்ஷமாகவே யிருக்கிறது. இந்தக் குற்றச்சாட்டுகள் விசாரிக்கும் விஷயத்தில் எனது யோசனைகளை ஏற்றுக்கொள்வதாக அன்று காங்கிரஸ் கமிட்டி ஒப்புக் கொண்டது. அதன்படி விசாரணை நடைபெறும் என நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால் நாங்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக காங்கிரஸ் கமிட்டி இவ்விஷயத்தை முடித்துவிட உத்தரவு அளித்துவிட்டது."

என்று முன்னாள் முதலமைச்சர் தோழர் பிரகாசம் ஒரு அறிக்கை மூலம் கூறியிருக்கிறார்.

அவர் மேலும் கூறுவதாவது:—

"நான் அந்த மூன்று உறுப்பினர்களுக்கும் அனுப்பியிருந்த கடிதத்தில், மந்திரி சபை பற்றி சாட்டப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகள் எவ்வளவு முக்கியமானவை என்பதையும், அவை எந்த முறையில் விசாரிக்கப்படவேண்டியவை என்பது பற்றியும் குறிப்பிட்டிருந்தேன். குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்படும்போது, எப்படிப்பட்ட சான்றுகளைத் தருவது என்பதுபற்றி நாங்கள் திட்டமிட்டிருந்தோம். அதற்கான சந்தர்ப்பத்தையும் எதிர்பார்த்திருந்தோம்.

பிப்ரவரி மாதம் 17-ம் தேதி நான் இங்கு வரும் வரை (புதுடில்லிக்கு) இவ்விஷயத்தை விசாரிக்க ஒரு தனி நீதிமன்றம் அமைக்கப்படும், அல்லது துணைக்கமிட்டியினால் சாட்சிகள் விசாரிக்கப்படுவர் என்றே எண்ணியிருந்தேன். சங்கரராவ் தேவின் அறிக்கை எப்படி ஒருதலைப் பக்ஷமாக இருந்ததோ, அதபோல் இதுவும் ஒருதலைப் பக்ஷ தீர்ப்பாக இருக்கும் என்று நான் நம்பவேயில்லை. குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. இப்படிச் சொல்லுவது தவறு" என்றும் கூறியிருக்கிறார்.

ஆம்; மேலிடத்தார் தீர்ப்பு ஒருதலைப் பக்ஷமானதே. இதனை நாம் முன்னரேசுட்டிக் காட்டியுள்ளோம். அதனைத் தோழர் பிரகாசத்தின் இவ்வறிக்கை தெளிவு படுத்துவதாக அமைந்துள்ளது.

தோழர் பிரகாசம் காங்கிரஸ் பெருமக்களில் ஒருவர்; முன்னாள் முதலமைச்சர்; ஆட்சிப்பீடத்தில் சில காலம் அமர்ந்திருந்து, ஆட்சியாளரின் அகம், புறம் இரண்டினையும் செம்மையாக அறிந்தவர். மேலிடத்தின் போக்கு இன்னது என்பதை ஏற்கனவே அனுபவத்தில் கண்டிருப்பவர். பல சந்தர்ப்பங்களில் மேலிடத்தாரின் யதேச்சாதிகாரப் போக்கைக் கண்டித்திருப்பவர். இத்தகைய அனுபவசாலி கூறுகிறார், மேலிடத்து மும்மூர்த்திகளின் தீர்ப்பு முற்றிலும் தவறு; நடுநிலைமையற்றது, அடாத செயல் என்றெல்லாம், அது மட்டுமல்ல; தான் எதிர்பார்த்தது ஒன்று, நடந்தது ஒன்று—தான் சொன்னது ஒன்று, மேலிடத்தார் செய்தது ஒன்று என விஷயத்தை விளக்கமாகச் சொல்லுகிறார் அவர். இவை அனைத்தும் எதைக் காட்டுகின்றன? இவ்விந்திய உபகண்ட அரசியல் குறிப்பிட்ட ஒரு சில வடவரின் யதேச்சாதிகாரத்தின் கீழ் உள்ளது என்பதே யன்றோ?

சென்னை மந்திரிகள் மீதுள்ள குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்படுவது பற்றியோ, படாததுபற்றியோ நாம் கவலை கொள்ளத் தேவையில்லை. எனினும், வடவரின் நீதிபரிபாலன முறை எந்த அளவில் உள்ளது என்பதை விளக்கவே, தோழர் பிரகாசத்தின் அறிக்கையை எடுத்துகாட்டுகிறோம்.

எடுத்ததற்கெல்லாம் ஜனநாயகத் தம்பட்டம் அடிக்கும் சிலர்களின் ஆட்சியில், ஆட்சியாளர் செய்யும் அடாத செயல்களை—ஊழல்களை சரியானபடி விசாரித்து, நல்ல தீர்ப்பளிக்க ஆளில்லை! ஆட்சி என்னவோ நடக்கிறது! இதிலிருந்தே தெரிந்து கொள்ளுங்கள் மற்ற அரசியல் விஷயங்களில், ஜனநாயகம் என்ன பாடுபடும் இந்தப் புண்ணியர்களிடம் சிக்கி என்பதை!

# சென்னை டிராம்வே தொழிலாளர் வேலை நிறுத்தம்

## பல தொழிலாளர் கைது செய்யப்பட்டனர்

### போனஸ் தரப்படாததின் விளைவு!

சென்னை, பிப். 22—

1948-49-ம் ஆண்டுக்குபோனஸ் கோரி சுமார் 262 பேர் சென்னை டிராம்வே தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

இந்த வேலை நிறுத்தம் திங்கட்கிழமை ஆரம்பமாயிற்று. டிரைவர்கள், கண்டக்டர்கள், தொழிற்சாலையில் வேலை செய்வோர் உட்பட சுமார் 100 பேர் வேலைக்கு வரவில்லை.

இன்று மாலை சுமார் அறுபதுக்கு மேற்பட்ட தொழிலாளர், அலுவலகத்திற்கு முன்னிருந்தே வேலை நிறுத்தம் செய்தனர்.

போலீசுக்குச் செய்தி அறிவிக்கப்பட்டது. போலீஸ் கமிஷனர்கள் தோழர்கள் மகாதேவன், வெங்கடேஸ்வரலு ஆகியோர் டிராம்வே அலுவலகத்திற்கு வந்து, டிராம்வே அதிகாரிகள் இந்த வேலை நிறுத்தம் செல்லுபடியாகாதென்றும், அதனால் வேலை நிறுத்தத்தைக் கைவிடுமாறும் அச்சுறுத்தினர். இதற்குத் தொழிலாளர்கள் செவிசாய்க்காததால் அவர்களெல்லாம் கைது செய்யப்பட்டு, போலீஸ் வானில் அழைத்துச் செல்லப்பட்டனர். இந்த வேலை நிறுத்தத்தில் காங்கிரஸ் தொழிலாளர் பங்குகொள்ளவில்லையாம்.

### பாதிரியார் மீது வழக்கு

போலந்து சர்க்காருக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டு, காஸிமிர்ஸ் கோவால்ஸ்கி என்ற பாதிரி மீது கம்யூனிஸ்ட்கள் வழக்கு தொடர்ந்திருக்கின்றனர். இவரை இரா வீட்டிலேயே அதிகாரிகள் காவலில் வைத்திருக்கின்றனர்.

### சியாங் விமானங்களின் குண்டு வீச்சு!

ஹாங்ஹாங், பிப் 23—

சியாங்கின் விமானங்கள் 17 தினங்களில் இரண்டாவது தடவையாக ஹாங்ஹாங் எல்லையிலுள்ள கம்யூனிஸ்ட் பெட்ரோல் ஸ்டாக்குகள் மீது குண்டு வீசியிருக்கிறது. இதனால் பெரும் வெடி விபத்து ஏற்பட்டது.

பிரிட்டிஷ் எல்லைக்கருகில் வந்து கொண்டிருந்த காண்டன் ரயில் மீது மற்றொரு குண்டு விழுந்ததால் 15 சீன பிரயாணிகள் மாண்டனர். 20 பேர் காயமடைந்தனர்.

லண்டன், பிப். 23—

ஜெட் ரயில்வே என்ஜின்கள் தயாரிக்க ஒரு பெரிய தொழிற்சாலை கட்டப்பட்டு வருகிறது. ஜெட் ரயில் என்ஜின்கள் பிரிட்டனில் இதுவரைத் தயாரிக்கப்பட்டதேயில்லை. —ரூனோப்

# இமயம் முதல் குமரிவரை ஒரே நாடாம்?

## தமிழர்கள் தம்மை இந்தியரென்றே சொல்லிக்கொள்ள வேண்டுமாம்!

### டாக்டர் சுப்பராயன் கூற்று!

சென்னை, பிப். 23—

இந்தோனேஷியாவில் இந்தியத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள டாக்டர் சுப்பராயன் அவர்கட்கு, திருவல்லிக்கேணி காந்தி சேவா சங்கத்தார் நேற்றையத் தினம் ஒரு வரவேற்பு அளித்தனர்.

வரவேற்புக்குப் பதில் அளிக்கும் முறையில் அவர் பின் வருமாறு பேசியிருக்கிறார்:—

"இமயம் முதல் குமரிவரை பரவியுள்ள இந்தியா ஓரே நாடு. தமிழர்கள் உட்பட அனைவரும் தம்மை இந்தியர் என்றே எண்ணிக்கொள்ள வேண்டும்." என்றார்.

அவர் மேலும் பேசுகையில், பண்டைத் தமிழருக்கும் இந்தோனேஷியருக்கும் இடையே இருந்த உறவுமுறை பற்றியும் குறிப்பிட்டார். இந்தோனேஷியாவுக்கு சுதந்தரம் தேடித்தர பண்டித ஜவஹர் செய்த உதவி மகத்தானது என்றும் பேசினார்.

# ரஷியா, போர் முகாம்கள் அமைக்கிறதாம்!

—(0)—

## "கிளாஸ்கோ ஹெரால்டு" உத்தேசம்!

லண்டன், பிப். 23—

மேற்கு நாடுகளுடன் சமரசம் பேசுவதற்குத் தயார் என்று சொல்லிக்கொண்டே யுத்த முஸ்திபுகளில் ரஷ்யா தீவிரமாக ஈடுபட்டு வருவதாகவும், 6 திசைகளில் படையெடுக்க திருப்புகளுக்கு வேண்டிய சாதனங்களை எல்லாம் ரஷ்யா ஏற்படுத்திவிட்டதென்றும் கிளாஸ்கோ ஹெரால்ட் ராஜதந்திர நிருபர் கூறுகிறார்.

தங்களிடம்போதிய அணுக்குண்டுகள் இல்லை என்றாலும், அணுகுண்டுகளை எல்லாம் மிஞ்சக்கூடிய இதர ஆயுதங்கள் தங்களிடம் இருப்பதாக அவர்கள் நம்பிக்கையுடன் இருப்பதாக அப்பத்திரிகை நிருபர் கூறுகிறார்.

1952க்குள் ரஷ்யாவின் முஸ்தீபுகள் பூரணமாகி விடும் என்றும், காலதாமதம் செய்துகொண்டே தங்கள் முஸ்திபைத் தயார்செய்ய ரஷ்யா முயன்று வருகிறதென்றும் அவர் கூறுகிறார்.

### ஒரு நாளைக்கு இரண்டுகார்கள் அபேஸ்!

ஒரு மோட்டாரைத் திருடியதாக லண்டன் கோர்ட்டில் குற்றம் சாட்டப்பட்ட ஒருவன் தன் குற்றத்தை ஒப்புக்கொள்கையில் ஒரு நாளைக்கு தான் எடுத்துக்கொண்டு கைவிட்டு விடும் காரின் எண்ணிக்கை இரண்டு என்று கூறினான். —ரூனோம்

# மாலை மணி

சென்னை 24—2—50 வெள்ளிக்கிழமை


# ஒருவேளை உணவை ஒழி!

**உணவு இறக்குமதியைக் குறையுங்கள்!**

**உணவு உற்பத்தியைப் பெருக்குங்கள்!**

**ஒருவேளை உணவை ஒழியுங்கள்!**

**உள்ளதைக் கொண்டு மகிழுங்கள்!**

**பஞ்சம் வந்தால் பதறுதீர்; வறுமை நீண்டிடினும், வாடாதீர்! எதுவரினும வரட்டும்; பொறுமையை மட்டும் கொள்ளுங்கள்!**

**எல்லாம் நன்மைக்கே! எதொன்றுக்கும் அஞ்சவேண்டாம! அரசாங்கத்தை மட்டும் ஆதரியுங்கள்!**

என்ற இதோபதேச மொழிகளை 'உருக்கமுடன்' எடுத்துக் கூறி வருகின்றனர், நாடாள வந்த மந்திரிமார்கள். இந்த உபதேச மொழிகளைச் சொலலுந் திறமையால், கேட்கும் செவிகளுக்கு வேண்டுமானால் அவைகள் இனிமையாக இருக்கலாமே யொழிய, நாட்டின் நலிவையும், மககளின் இன்னலையும் போக்கும் அருமருந்தாக அவை அமையவில்லை! இத்தகைய உபதேச மொழிகளைக் கொண்டு, எத்துணை நாட்களுக்கு நாட்டில் தமது 'நல்லாட்சி'யை நிலை நிறுத்த அவர்கள் எண்ணியிருக்கிறார்களோ, தெரியவில்லை!

பருவ மழை தவறியதன் காரணமாக நாட்டில் விளைவில்லை; விளைவு குறைந்து விட்ட காரணத்தால், ஏறகனவே பற்றாக்குறைப் பகுதிகளாகக் காணபபட்ட இடங்கள், பஞ்சத்தைத் தழுவி நிற்க வேணடிய அவசியத்தில் கொண்டுவந்து விடப்பட்டிருக்கின்றன. பஞ்சம் பரவியுள்ள இடங்களில் பட்டினிப் பிணங்கள் எத்துணை சாயுமோ என்று ஏங்கிக்கொண்டிருக்கும் நிலை, ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப் படுகிறது. இப்படிப்பட்ட நெருக்கடி நிலைமையில், "உணவுப் பொருளை இறக்குமதி செய்வதில்லை என்று நாங்கள் உறுதி பூண்டுவிட்டோம்" என்று, ஒரு அரசாங்கம் வீராபபு பேசி நிற்குமானால், அதன போக்கு பற்றி என்ன கருதுவது? ஆணவம என்று கருதுவதா? அறியாமையின விளைவு என்று கருதுவதா? அல்லது வீண் வீராப்பின் விபரீதம என்று எண்ணுவதா?

ஒரு நாட்டின் மக்கள், பட்டினியால் சாகுந்தருவாயில்; குற்றுயிரும் குறையுயிருமாகக் கிடககிறார்கள் என்றால், அந்நாட்டின் நலவாழ்வை எண்ணும் அரசாங்கம் என்ன செய்ய வேண்டும்? உணவு பெருத்த நாடுகளிலிருந்து, என்ன விலை கொடுத்தேனும பெற்று வாங்கி, பட்டினிப் பட்டாளததைச் சாவினின்றும காப்பாற்றுவதுதானே, அதன் முதற் கடமையாக இருக்க வேண்டும்! ஆனால், இந்தியத் துணைக்கண்ட அரசாங்கமோ எனில், அதற்கு நேர்மாறான கொள்கையைக் கடைப்பிடிக்க முயன்றிருக்கிறது. இந்தியத் துணைக்கண்டத்தின் ஒரு பகுதியாகிய சென்னை மாநிலத்தில், பஞ்சம் பனிப்படலம் போல் பரவி வருகின்றது; மக்களோ எலும்புக் கூட்டினராக மாறி வருகின்றனர்; இந்நிலையில், வெளிநாட்டு உணவுப் பொருளை இறக்குமதி செய்யப்போவதில்லை—அதன் மூலம் அனேக கோடி ரூபாய்களை மிச்சப்படுத்தப்போகிறோம் என்ற வீம்புப்பேச்சினை, வேளையில்லாத வேளையில், பட்டினியால் பிணங்கள் சாயுமோ என்று அஞ்சும் நேரத்தில், மத்திய அரசாங்கத்தினர் பேசித்திரிகின்றனர் என்றால், மடியும் உயிர்களை எந்த அளவுக்கு அவர்கள் மதிப்பிடுகிறார்கள் என்பது விளக்கமாகிறதே. ஒரு சில ஆயிரமக்களை மடியவிட்டாகிலும்; ஒருசிலகோடி ரூபாய்களைக் காப்பாற்றிக் கொண்டால், போதும் என்று எண்ணுகிறார்கள் போலும்!

உணவில்லை, ஒருவேளை, உணவை ஒழியுங்கள் என்று மந்திரிமார்கள, உணவுக் கமிட்டிகளைவிட்டு, கிராமங்களில் பிரசாரம் செய்யச் சொல்லுகிறார்களாம். அண்மையில் பர்மாவிலிருந்து சென்னைக்கு வந்திருந்த பர்மாவின் பிரதமர் தோழர் தாகின் நூ, தங்கள் நாட்டில் ஏராளமான அளவுக்கு அரிசி குவிந்திருக்கிறது என்றும், அதைப் பிற நாடுகளுக்கு விற்கத் தாங்கள் தயாராக இருப்பதாகவும், பிற நாடுகள் அவற்றைப் பெற்றுக் கொண்டால்தான் பர்மா வாழ முடியும் என்றும் குறிப்பிட்டார். இங்கே உணவில்லை—பர்மாவில் குவிந்து கிடக்கிறது! நெருக்கடி நிலைமையைத் தீர்க்க நேரியமனம் இருந்தால் ஒரு நேர்மையான ஒப்பந்தத்தின் மூலம், பர்மா அரிசியைப் பெற்று, உடனடி நெருக்கடியைத் தீர்த்திடுக்கலாமே. உற்பத்தி பெருகவேண்டும், என்பதிலே நமக்கு மாறுபாடு கிடையாது. ஆனால் உற்பத்தி பெருகாத வரையில், பற்றாக்குறை இருக்கிறவரையில், பஞ்சம் படர்கிறவரையில் என்ன வழி? பிறநாட்டு உணவுப் பொருளை இறக்குமதி செய்வதில்லை என்றால், நெருக்கடி நிலைமை எப்படித் தீரும்! எனவேதான், உணவு நெருக்கடியை ஏற்ற முறையில் தீர்க்க, இன்றைய ஆளவந்தார்களிடை ஏற்றத் திட்டமில்லை என்று வாதிககிறோம்; திட்டம் ஏற்ற வகையில் தீட்டுக என்று வற்புறுத்துகிறோம்.

மக்களில் பலர், அதுவும் தொழிலாளிகளாகவும், பாட்டாளிகளாகவும் உள்ளவர்கள் முன்னரே பல வேளை உணவுகளை ஒழித்துவிட்டு, அரை வயிற்றுக் கஞ்சிக்கு அலாப் பறக்கிறார்களே! அவர்களிடத்தில் மந்திரிமார்கள் உபதேசம் புரிகின்றனர் ஒரு வேளை உணவை ஒழித்து விடுங்கள் என்று ஏற்கனவே, எலும்புக் கூட்டினராக விளங்கும் மக்கள் ஒரு வேளை உணவை எப்படி ஒழிக்க முடியும்? அப்படி ஒழிக்க, மூன்று வேளை உணவை முழுமையாகவா, அவர்கள் உட்கொள்கிறார்கள்? இல்லையே! மூன்று வேளை உணவையும் மக்கள் தவறாது பெறவழி செய்யத்தான் அரசாங்கமும், மந்திரிமார்களும் தேவையேயொழிய, ஒரு வேளை உணவை விட்டுக் கொடுங்கள் என்று உபதேசம் புரிய அவ்வளவு பெரியவர்கள் தேவையில்லை! இந்த உபதேசத்தைச் செய்ய, சாதாரண ஆண்டிகளே போதுமே! 'உணவு உற்பத்தியைப் பெருக்குங்கள்" — "உணவு உற்பத்தியைப் பெருக்குங்கள்" என்ற முழக்கத்தைச் சென்றவிடங்களில், இடைவிடாது எழுப்புகின்றனர் ஆளவந்தார்கள். உற்பத்தியைப் பெருக்க என்ன என்ன வசதிகள்—வழிகள் செய்து கொடுக்கிறார்கள்—கொடுத்தால்தானே உற்பத்தியைப் பெருக்க முடியும், என்று பொது மக்கள்-அதுவும் வேலையற்றப் பொதுமக்கள் கேட்கத்தானே செய்வார்கள். நிலம்—நீர்—ஏர்—கலப்பை—எருதுகள்—எருவை ஆகிய இவை தேவை என்கிறார்களே—அதற்கு என்ன வழி செய்கிறார்கள், ஆளவந்தார்கள்? ஏதும் செய்யாமல், வெறும் உபதேசத்தால் எப்படி உணவு உற்பத்தியாகும்?

இந்நாட்டின் நீர்வளமும், நிலவளமும் விஞ்ஞான ரீதியில் பயன்படுத்தப்பட்டால்; வேண்டிய அளவுக்கு மேல், எத்துணையோ மடங்கு உணவுப்பொருளை இந்நாட்டிலேயே காணமுடியுமே! அதற்கு எங்கே திட்டம்? நிலவளத்தையும், நீர்வளத்தையும் பயன்படுத்தும் வழிகளையும், அவற்றிற்கான வசதிகளையும்செய்து தரும் முயற்சியில், அரசாங்கம் முன்னரே ஈடுபட்டிருந்தால், நாடு இந்த அளவுக்கு இப்பொழுது நலிவுற்றிருக்காது.

இருப்பதைக் கொண்டு திருப்தி கொள்—ஒரு வேளை உணவை ஒழி—பஞ்சம் வந்தால், பட்டினி தீண்டினால், சாவு அணைத்தால், அஞ்சாதே, பொறுமையைக் கடைப்பிடி. என்ற உபதேசம் புரிவது மந்திரிமார்களுக்கு ஒரு தொழிலாக அமையலாமேயல்லாமல், உற்பத்தியைப் பெருக்குவதாகவோ, உணவைத் தருவதாகவோ, உல்லாச வாழ்வை அளிப்பதாகவோ அமையாது. வெறும் உபதேசம் உணவு தராது! உடனடியாக உணவுப் பொருளைத் திரட்டும் விவேகமும், உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான வழிகளைக் காணும் அறிவும், வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆற்றலும் ஆகிய இவை ஆளவந்தார்களிடம் அமையவேண்டும். அமையும்படி தங்களை ஆளவந்தார்கள் ஆக்கிக்கொள்வார்களா? ஒரு வேளை உணவை ஒழி என்பது நல்லறமுமாகாது; நாகரிகமுமில்லை; நலிவையும் போக்காது!

## சாத்தூரில் தண்ணீர்ப்பஞ்சம்

### குடி தண்ணீர் பெறுவதற்கு மாதம் எட்டு ரூபாய்!

சென்னை, பிப். 23—

இராமநாதபுரம் மாவட்டத்தில் குறிப்பாக சாத்தூரில் தண்ணீர்ப் பஞ்சம் மிகவும் அதிகரித்திருக்கிறதென்றும், மழை இல்லாததன் விளைவால் மாவட்டத்தில் சில இடங்களில் பயிர்கள் வாடிவருகின்றன என்றும் கருத்தில் இரண்டாவது முறை பயிரிடுவதற்கு ஏற்றதாக இல்லையென்றும், அண்மையில் இம்மாவட்டத்தில் பிரயாணம் செய்துவிட்டு சென்னைக்குத் திரும்பிய உயர்தர ஐ. ஸி. எஸ். அதிகாரியொருவர் குளோப் நிருபரிடம் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:— சாத்தூரில் குளோரமி மக்கள் அருகிலுள்ள கிணற்றிலிருந்தோ அல்லது இவ்வூர் சுற்று வட்டாரங்களில் மக்கள் குடிதண்ணீர் எடுத்துச் செல்கின்றனர். தண்ணீரை மாட்டு வண்டிகளின் மீது எடுத்துச் செல்வதுடன் சிலர் இக்குடி தண்ணீருக்கு மாதம் ரூ. எட்டு கொடுக்கின்றனர்.

ஒரு மாதத்திற்கு முன்பு இங்குள்ள கிணறுகளில் 6-முதல் 8-அடி ஆழம் வரை தண்ணீர் இருந்தது.

இப்பொழுது 2 அல்லது 3 அடி ஆழந்தான் தண்ணீர் காணப்படுகிறது.

இராமநாதபுரத்துடன் இத்தண்ணீர்ப் பஞ்சம் நிற்கவில்லை. திருநெல்வேலியைச் சார்ந்த கோவில்பட்டியிலும், மதுரையைச் சார்ந்த பழனி சுற்று வட்டாரங்களிலும் இப்பஞ்சம் மிகுதியாகக் காணப்படுகிறது.

## ரயில்வே வரவு செலவு கணக்கு

**கட்டணங்களில் மாறுதல் இராது**

இந்திய சட்ட சபையில் ரயில்வே அமைச்சர் தோழர் கோபால்சாமி அய்யங்கார் 1950-51-ம் ஆண்டுக்கு ரயில்வேவரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்தார். இந்த ஆண்டில் 14 கோடி ரூபாய் உபரியாக இருக்கும் என எதிர்பார்ப்பதாக அவர் பேசுகையில் குறிப்பிட்டார்.

**வரவு செலவு விவரம்**

(1948—49 நடைபெற்றது)

| | | |
|---|---|---|
| வரவு | — | ரூ. 213·10 கோடி |
| செலவு | — | ரூ. 193·12 ,, |
| உபரி | — | ரூ. 19·98 ,, |
| 1949—50 எதிர்பார்ப்பது | | |
| வரவு | — | ரூ. 205·15 கோடி |
| செலவு | — | ரூ. 214·13 ,, |
| உபரி | — | ரூ. 11·2 ,, |
| 1950—51 எதிர்பார்ப்பது | | |
| வரவு | — | ரூ. 232·50 கோடி |
| செலவு | — | ரூ. 218·49 ,, |
| உபரி | — | ரூ. 14·01 ,, |

1950—51-ம் ஆண்டில் ரயில்வே கட்டணங்களில் எவ்வித மாறுதலும் இராது என்று அமைச்சர் அறிவித்தார்.

## சென்னைத் துறைமுகத்தில் வேலையில்லாத் திண்டாட்டம்

—(0)—

### நிலக்கடலை ஏற்றுமதிக்கு மத்திய சர்க்கார் தடை விதித்ததன் விளைவு!

சென்னை, பிப். 23—

சென்னை ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரம் நவம்பர் கடைசியிலிருந்து குறைந்திருப்பதாகத் தெரிகிறது. இறக்குமதி மட்டும் 40 சத விகிதம் குறைந்திருக்கிறது. இன்றியமையா துறைமுகப் பொருளாகிய நிலக்கரி கல்கத்தாவிலிருந்து வருகிறது. பிப். 20-ந்தேதி 45 000 டன்கள் கொண்ட 10 நிலக்கரிக் கப்பல்கள் எம். எஸ். எம். இரயில்வேய்க்காக வந்திருக்கின்றன. இம்மாத ஆரம்பம் முதல் நிலக்கடலை ஏற்றுமதியை மத்தியசர்க்கார் தடை செய்ததின் காரணமாக சென்னைத் துறைமுகம் மத்திய சர்க்காரால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், துறைமுகப் போக்குவரத்து குறைந்துதொழிலாளர்களுக்கு வேலை கிடைக்காத நிலைமை ஏற்பட்டுள்ளது.

## காஸ்மிக் கிரணம் பற்றிய ஆராய்ச்சிகள்

நியூயார்க், பிப். 23—

காஸ்மிக் கிரணம் சம்பந்தமான ஆராய்ச்சிக்கு வேண்டிய சாதனங்களை வாங்க யுனெஸ்கோ அனுமதித்த ரூ. 19000 ஐக்கொண்ட பெருவிலுள்ள மொரோகொசாஸ்டேஷனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த காஸ்மிக்கிரணங்கள் ஆயெனின் நடவடிக்கைகளால் ஏற்படுபவை என்று சிகாகோ விஞ்ஞானி ஒருவர் கூறுகிறார்.

இக்கிரணங்கள் பலவின் இரட்டிப்பு மடங்குசக்தியுடன் பூமியைத் தாக்குகிறது. என்று பௌதிக சாஸ்திர நிபுணர் மார்ரில்ஸ்கின் கூறுகிறார்.

## பிரிட்டிஷ் பத்திரிகாசிரியர் புத்தமதத்தைத் தழுவினார்

கொழும்பு, பிப். 23—

பிரிட்டிஷ் பத்திரிகாசிரியரான தோழர் ரோனல்ட் ரோஸ் நட்காமா மடத்தில் ஜெர்மன் புத்த பிட்சுவான ஞானதிலோகா என்பவரிடம் தீட்சை பெற்று புத்த மதத்தைத் தழுவினார்.

இவர் இங்கிலாந்தில் புத்தமதத்தைப் பற்றி படித்திருந்தார். இவர் நட்காமாமடத்தில் சென்ற 6 மாதமாகவே தங்கியிருக்கிறார்.

## அறிவுக் கதிர்

❋

**சுயநலம் என்னும் கவசத்தால் தம்மைப் பாதுகாத்துக்கொண்டு பிறர் துயரம் காண மறுப்பவர்கள், தம்மை அறியாமலேயே வாழ்க்கை இன்பங்கள் பல வற்றை ஏற்க மறுப்பவர்களாவர்.**

— லார்ட் ஆவ்பரி

## நன்றி!

எனது புதல்வர்களுக்கு 9—2—50-ல் நடந்த திருமணங்களுக்கு வாழ்த்துச் செய்திகள் அனுப்பிய நண்பர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்

கே. கே. நீலமேகம்

கும்பகோணம் 22—2—50

# தி. மு. கழகக் கூட்டங்கள்

**25 - 2 - 50**

| | |
|---|---|
| சீர்காழி:— | இரா. நெடுஞ்செழியன். |

**26 - 2 - 50**

| | |
|---|---|
| ஆம்பூர் :— | க. அன்பழகன், ப. இராமலிங்கம். |
| கோலார் தங்கவயல்:— | என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன். |
| பொள்ளாச்சி:— | எஸ். ஆர். சுப்ரமணியம், அ. தமிழரசு, மா. தங்கவேலர். |

# திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாடு

## வரவேற்புக்குழுக் கூட்டம்

திருச்சி, பிப். 20—

19—2—50 காலை 10 மணிக்கு என். எஸ். பங்களாவில் வரவேற்புக் குழுவினர் கூட்டம் தோழர் என். சங்கரன் அவர்கள் தலைமையில் கூடியது. அதுசமயம் மாநாட்டு வரவு செலவு கணக்கு பரிசீலனை செய்யப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டது. கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மாநாட்டு வரவேற்புக்குழு அமைப்பு கலைக்கப்பட்டது.

1. மாநாட்டு வரவு செலவு கணக்கு பரிசீலனை செய்யப்பட்டு, ஒப்புக்கொள்ளப்பட்டது. கையிருப்புத்தொகை ரூ 2076—0—0 ரூபாய் (இரண்டாயிரத்து எழுபத்தாறு) அடுத்து கூட்டப்படும் மாவட்டக் கமிட்டியிடம் ஒப்படைப்பது. அதுபரியந்தம் அத்தொகை தோழர் என். சாம்பசிவம் அவர்களிடமே இருப்பது.

2. மாநாட்டு சம்பந்தமான புத்தகங்களைப் பெற்றுச் சென்றவர்களிடமிருந்து செயலாளர் வசூல் செய்து மாவட்டக் கமிட்டியிடம் ஒப்படைப்பது.

3. மாநாடு சிறப்புற நடைபெறுவதற்கானவகையில் நன்கொடையாளர்கள்பிரதிநிதிகள்,பார்வையாளர்கள், சொற்பொழிவாற்றியதலைவர்கள் உடனிருந்து ஒத்துழைத்த தோழர்கள் மற்றும் யாவர்க்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதுடன், மாநாட்டு வரவேற்புக் கமிட்டி ரத்தாகிறது.

### வரவு

| | |
|---|---|
| நன்கொடை வரவு | ரூ. 930—0—0 |
| மாநாட்டு நன்கொடையாளர்கள், பிரதிநிதிகள், பார்வையாளர்கள் மூலம் வரவு | ரூ. 4863—0—0 |
| ஆக வரவு | ரூ. 5793-0—0 |

### செலவு

| | |
|---|---|
| பந்தல், விளக்கு, ஒலிபெருக்கி | ரூ. 968—0—0 |
| நாடகம் | ரூ. 414—4—0 |
| விளம்பரச்செலவு, தபால், சில்லரைச் செலவு உள்பட | ரூ. 721-12—9 |
| பிரயாணச் செலவு, வண்டிச்சத்தம், கூலி உள்பட | ரூ 866—9—0 |
| உணவு, காபி செலவு கையிருப்பு சாமான்கள் விற்றது போக | ரூ 1246—6—3 |
| ஆக செலவு | ரூ. 3717—0—0 |
| செலவு போக மீதி இருப்பு ரொக்கம் | ரூ. 2076—0—0 |

# பிரிட்டிஷ் பொதுத்தேர்தல் ஆரம்பம்

## தொழிற்கட்சியே வெற்றிபெறும்?

லண்டன், பிப். 23—

இன்று பிரிட்டனில் பொதுத் தேர்தல் நடைபெறுகிறது. கட்சிகளின் பலா பலன்களைக் குறித்து ஹேஷ்யங்கள் கிளம்ப ஆரம்பித்திருக்கின்றன.

எந்தக் கட்சியையும்விட தொழிற் கட்சியே இத் தேர்தலில் வெற்றி பெறும் என்றும், ஆனல் முன்தேர்தலில் போல் பெருத்த மெஜாரிட்டியுடன் இருக்காது என்றும் நிபுணர்கள் கூறுகிறது.

கன்ஸர் வேடிவ்கள் அதிக ஸ்தானங்களைப் பெறலாம் என்றும் அதே போல் லிபரல்களும் முன்புபோல் இல்லாமல் கிட்டதட்ட 30 ஸ்தானங்களைப் பெறலாம் என்றும் சில விமர்சகர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

இத்தடவை அதிக வோட்டுகள் பதிவாகலாம் என்றும்கூறப்படுகிறது சென்ற தேர்தலில் 23 பெண்களே வெற்றி பெற்றனர். இப்பொழுது தொழிற் கட்சியில் 42 பெண்களும் கன்ஸர் வேடிவ் கட்சியில் 24 பெண்களும் லிபரல் கட்சியில் 44 பெண்களும் தேர்தலில் போட்டி யிடுகின்றனர்.

இரு இந்தியர்கள் பாமிதத்தும் கூறிலிவாலியாவும் இத் தேர்தலில் போட்டியிடுகின்றனர். அமெரியுடன் போட்டியிட்டபோது இருந்த அவ்வளவு மோசமான நிலைமை இப்பொழுது இல்லை என்று கம்யூனிஸ்டு அபேட்சகர் பாமிதத் குளோப் நிருபரிடம் கூறினர். பாமிதத்துக்கு 1000 முதல 2000 வோட்டுகளுக்குள்ளேயே தான் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது.

பெவின் கட்டாயம் வெற்றிபெற்று விடுவார் என்று சொல்லப்படுகிறது. கன்ஸர்வேடிவ்கள் வோட்டுகள் எல்லா அபேட்சகர்களுக்கும் பிரிந்து போகக்கூடுமாதலால், பெவின் தோல்வியடையலாம் என்று கூறுகின்றனர்.

மற்றொரு இந்திய அபேட்சகரும் லிபரல் கட்சி அபேட்சருமான சர்தார் அரற்லுவாலியா தனக்கு வெற்றி கிடைப்பது நிச்சயம் என்று சொல்லிக் கொள்கிறார். இந்தியாவிலிருந்து அவருக்கு வெற்றி கிடைக்க வேண்டும் என்று வாழ்த்தி சுமார் 1000க்கு மேற்பட்ட கடிதங்களும் தந்திகளும் அவருக்கு வந்திருக்கிறதாம், ஸ்தானத்தைப் பெறுவதைவிட கொள்கைக்காகவேதான் போட்டி யிடுவதாக அவர் கூறுகிறார்.

*லேடி ஜெஸ்ஸப் ஆசியமாதுகளின் மாதர்கள் மிகவும் முன்னேறியிருக்கின்றனர் என்றும், அமெரிக்க மாதர்கள் கூட இந்த அளவுக்கு முன்னேறவில்லை என்றும் அவர் கூறினர்.*

— குளோப்

# இனி நடப்பவை

சென்னை:—ஓட்டேரி தி. மு. கழகச் சார்பில் 26-2-50 ஞாயிறு காலை 10-மணிக்கு புலவர் வே. ந. அர்ச்சுனனார் அவர்களால் குறள் வகுப்பு நடைபெறும். இடம்:—பிரிவின் ரோடு, ஓட்டேரி.

* * *

ஆம்பூர்:—இவ்வூர் தி. மு. கழகக் கிளையின் சார்பில் 26—2—50 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு முகம்மதலி மைதானத்தில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர் ப. இராமலிங்கம் தலைமை வகிப்பார். தோழர் க. அன்பழகன், மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

வேலூர் (வ-ஆ)— 26-2-50 ஞாயிறு காலை 9-மணிக்கு எண் 17 கலாஸ் அஸ்தகிரி தெரு, தி. மு. கழகக் கட்டடத்தில் நகர திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் கூட்டம் நடைபெறும். உறுப்பினரனைவரும் தவறாது வரவேண்டுமாய் வேண்டப்படுகிறார்கள்.

* * *

வேலூர்-திருவள்ளுவர் சொற்பயிற்சிக் கழகக் கூட்டம், 26-2-50 ஞாயிறு மாலை 3-மணிக்கு, வசந்தபுரச்சேரியிலுள்ள முதியோர் கல்விக் கட்டிடத்தில் நடைபெறும்.

* * *

பொன்மலை—இவ்வூர் திராவிட வாலிபர் கழகத் தோட்டத்தில், தோழர் ஜி. பராங்குசம் தலைமையில் 25-2-50 சனி மாலை 4 மணிக்கு கழக உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அதுபோது, 1950 ஆம் ஆண்டிற்குக் கழக நிர்வாகிகள் தேர்தல் நடைபெறுமாகையால், உறுப்பினரனைவரும் தவறாது வருமாறு வேண்டப்படுகிறார்கள்.

* * *

பொள்ளாச்சி:—இவ்வூர் திராவிட மாணவர் முன்னேற்றக்கழகச் சார்பில் 26—2—50 ஞாயிறு மாலை ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் திருப்பூர் எஸ். ஆர். சுப்பிரமணியம், அ. தமிழரசு, மா. தங்கவேலர் மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

கோவை—வடகோவை தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டமொன்று 26—2—50 ஞாயிறு காலை 10 மணிக்கு நடைபெறும். உறுப்பினரனைவரும் தவறாமல் வருகை தருமாறு அழைக்கப்படுகிறார்கள்.

* * *

நாமக்கல்:—சென்னை மாகாண மோட்டார் டிரான்ஸ்போர்ட் தொழிலாளர் சங்க மூன்றாவது மாநாடு, 26—2—50ல் நாமக்கல்லில் நடைபெறும். தோழர் எம். சீதாராம நாயுடு (லேபர் லீடர் சென்னை) தலைமை வகிப்பார், தோழர் எம். எஸ். கோதண்டபாணி பிள்ளை மாநாட்டைத் திறந்து வைப்பார், பலர் பேசுவர்.

* * *

சீர்காழி— இவ்வூர் திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பாகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் 25-2-50 சனிக்கிழமையன்று மாலை 6—மணிக்கு நடைபெறும். அதுபோது தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், மற்றும் பலரும் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

கோலார்—கோலார் தங்கவயல் தி. மு. கழகச் சார்பில் 26—2—50 மாலை ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன் மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

ஆரண்டநல்லூர்—இவ்வூர் வர்த்தகக் காரியஸ்தர் சங்கத்தின் 4 வது ஆண்டு விழா, 26—2—50 நடைபெறும். தோழர் ச. மாதவன் தலைமை வகிப்பார்.

# கழக நடவடிக்கைகள்

பொள்ளாச்சி:—6—2—50 ல் இரவு 9 மணிக்கு நகர திராவிட முன்னேற்ற (மேற்கு வட்டம் நகர உட்கிளை)க் கழகத்தின் செயற்குழு கூட்டம் செயலாளர் தோழர் தி. ராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் தி. மு. க. அங்கத்தினர் சேர்க்க நகர தி. மு. கழகத்திலிருந்து இரசீது புத்தகம் பெறுவது என்றும், பொதுச் செயலாளர் அண்ணாத்துரை அவர்களால் வெளியிட்ட குடியரசுத் திட்டத்தைப் பற்றிய அறிக்கையை வரவேற்றும், சென்னை—கணியூர் மாநாடுகளின் தீர்மானங்களை ஆதரித்தும், புரட்சி மணி என்ற தோழரை செயற்குழு உறுப்பினராகச் சேர்த்தும் இன்னும் ஐந்து செயற்குழு உறுப்பினர்களை சேர்த்துக்கொள்ள செயலாளருக்கு அதிகாரம் அளித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின், நன்றி கூறலுடன் செயற்குழு கூட்டம் இனிது கலைந்தது.

* * *

திட்டகுடி:—14-2-50-ல் திட்டகுடி தி. மு. க. செயற்குழுக் கூட்டம் இரா. பிச்சக்குட்டி தலைமையில் கூடி அடியில் கண்ட முடிவுகள் செய்யப்பட்டது.

### தீர்மானங்கள்

ஈரோடு வைத்திய வள்ளல் பெரியார் ஈ. வே. கிருஷ்ணசாமி அவர்கள் மறைவெய்தியது குறித்து வருத்தம் தெரிவிப்பதுடன், அன்னார் குடும்பத்தினருக்கு இக்கூட்டம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

11-2-50—ல் திட்டக்குடியில் நடந்த தி. மு. க. துவக்க விழாவின், நன்கொடை வரவு செலவுகளைப் பரிசீலனை செய்தது.

| | |
|---|---|
| நன்கொடை வசூல் | ரூ. 142-4-0 |
| விழா செலவு | ரூ 104-1-9 |
| செலவு நீக்கி இருப்பு | ரூ. 38-2-3 |

இந்த ரூ. இருப்புத் தொகையை பொருளாளர் உறுப்பினர் பூ. சுப்பிரமணியம் வசம் ஒப்புவிக்கப்பட்டது. துவக்கவிழாவுக்கு நன்கொடை அளித்த பெரியோர்களுக்கும் உடலுழைப்பு தந்துதவிய தோழர்களுக்கும் இக்கூட்டம் தனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறது என்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டு, செயலாளர் நன்றி கூறலுடன் இரவு 9—மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது.

* * *

உறையூர்:—நகர திராவிட முன்னேற்றக் கழகச் செயற்குழுக் கூட்டம் அ. க. கணேசன் அவர்கள் இல்லத்தில் 5-2-50 இரவு 8-30 மணிக்குக் கூடி கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானங்கள்:—வைத்திய வள்ளல் பெரியார் ஈ. வே. கிருஷ்ணசாமி அவர்கள் மறைந்தமைக்கு இக்கமிட்டி வருந்துவதோடு பிரிவாற்றாது வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

கழகத் துவக்கநாள் முதல் இதுவரையுள்ள வரவு செலவு கணக்குகளை பரிசீலனை செய்து இக்கமிட்டி ஒப்புக்கொள்ளுகிறது.

நமது ஊர் துவக்க விழாவிற்கு 19-2-50ம் தேதி வர தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஒப்புக்கொண்டதால், இதக்க அன்பர்களிடம் நன்கொடை வசூலித்து சிறப்பாக நடத்த இக்கமிட்டி தீர்மானிப்பதோடு நன்கொடை வசூலித்து நடத்த கீழ்கண்டவர்களை இக்கமிட்டி நியமித்திருக்கிறது.

1. கே. ஆர். ஏகாம்பரம், 2. ஆர். சுப்பிரமணியம், 3. என். சேவாலசுந்தரம், 4. டி. பி. அமுதமுத்து, 5. ஞானசுந்தரர், 6 பி. எஸ். முனிசாமி.

தேவமாண்டலம்: 10-2-50-ல் தி. மு. க. உறுப்பினர் கூடிய கூட்டத்தின் தீர்மானம் வருமாறு:—

ஈரோட்டு வைத்திய வள்ளல் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்கள் மறைவுக்கு அவர் குடும்பத்தாருக்கு தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளப்பட்டது. களவூர் வெங்கட்ராம் அவர்கள் தலைமையில் வேலூர் கி. வி. சிற்றரசு அவர்களையும், திருச்சி இரா. துரைராசன் அவர்களையும், கள்ளக்குறிச்சி குமார, தணிகாசலம், இரா. நீலகண்டன் அவர்களையும் மார்ச்சு திங்கள் 5-ம் நாள் 3-30 கூட்டம் நடத்தி கூட்டத்திற்குப் பேசவரும்படி மேல் கண்டவர்களை அஞ்சல் மூலமாக எழுதிக் கேட்டுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

* * *

மதுரை—இவ்வூர் மேற்கு வட்ட தி. மு. கழகக் கூட்டம் 16, கீழ அனுமார் கோவில் தெரு இல்லத்தில் நடைபெற்றது. அதுபோது தோழர் வை. அண்ணாதாசன் (வை. சுப்பிரமணியம்) மறைந்த ஈ. வெ. கிருஷ்ணசாமியவர்களைப்பற்றி சொற்பொழிவாற்றி, அன்னாரை விட்டுப் பிரிந்து வாடும் தோழர் சம்பத் அவர்களுக்கு இக்கூட்டம் மிகுந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டு, மறுமலர்ச்சி மாவீரர் அண்ணாத்துரை வருகைக்கு இந்தக் கூட்டம் மிகுந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, கழக உறுப்பினரைச் சேர்க்க உறுப்பினர்கள் முயற்சி செய்யவேண்டுமெனக் கூறினர். இரவு 10 மணிக்குக் கூட்டம் முடிந்தது.

* * *

கொல்லுமாங்குடி—போளம்:—தி. மு. க. செயற்குழுக் கூட்டம் 12-2-50 ஞாயிறு மாலை 6 மணியளவில் அ. கதிர்வேலன் மனையில் தோழர் மு. பக்கிரிசாமி அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. கழகம் நல்லமுறையில் பணியாற்ற வேறு செயற்குழு ஒன்று கீழ்கண்டவாறு ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

புதியசெயற்குழுவினர்— செயலாளர்:-த. நாகராசன்; துணைச்செயலாளர்கள்:-இரா. பாலாடையான்; சி. சுப்பிரமணியன்; பொருள் உறுப்பினர்:—மு. பக்கிரிசாமி; விளம்பர உறுப்பினர்:—கூத்தரசன்; ஏனைய செயற்குழுவினர்:—முகம்மது அலி, அ. கதிர்வேலன், இரா. இலக்குவன், டி. ஆர். கணபதி, ப. நாராயணசாமி. மற்றும் வைத்திய வள்ளல் ஈ. வெ. கி. மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், வரப்போகிற மே திங்களில் தோழர்களான சி. என். அண்ணாத்துரை எம். ஏ., மதியழகன் பி. ஏ. ஆகியோரைக்கொண்டு பொதுக்கூட்டம் போடவேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேறின.

| | |
|---|---|
| 25-12-49 அன்று பொதுக்கூட்டத்திற்குள்ள வரவு | ரூ. 47-0-0 |
| பொதுக்கூட்ட செலவு | ரூ. 45-15-0 |
| போக மீதி ரூபாய் | 1—1—6 |

மீதி பொருளாளரிடம் உள்ளது என விளம்பர உறுப்பினர் அறிவிக்கிறார்.

## பத்திரிகைக் குறும்பு !

கெய்ரோ, பிப். 22—

எகிப்திய—ஸ்விஸ் உறவில் ஏதோ நெருக்கடி ஏற்பட்டதாக ஸ்விஸ் பத்திரிகைகளில் வெளியான செய்திகளைக் கண்டித்து எகிப்து சர்க்கார் கெய்ரோவிலுள்ள ஸ்விஸ் ஸ்தானிகரிடம் ஒரு குறிப்பை அளித்திருக்கின்றனர்.

ஜினிவாவிலுள்ள தூதர்கள்தான் இம்மாதிரி பிரசாரத்திற்குக் காரணஸ்தர்களாக இருக்க வேண்டும் என்று நம்பப்படுகிறது. — ரூடேர்

# 'சேலம் செய்கை'க்குக் கண்டனம்
## சென்னையில் மாபெரும்
# பொதுக்கூட்டம்

சேலம் சிறையில் துப்பாக்கி துரைத்தனம் நடத்தியது குறித்துக் கண்டனம் தெரிவிக்க,

**சென்னை சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியின் எதிரிலுள்ள மைதானத்தில்**

(நேப்பியர் பார்க் அருகில்)

**26—2—50 ஞாயிறன்று மாலை 5-30 மணிக்கு**

பல கட்சிகளின் சார்பாக மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது

தோழர் எஸ். சி. சி. அந்தோணிப் பிள்ளை (H.M.S.) தலைமைவகிப்பார்.

தோழர்கள்:-எஸ். கிருஷ்ணமூர்த்தி பி.ஏ.,பி.எல். (M.P.T.U.C.)
கே எஸ். ஷெட்டி பி.ஏ.,பி.எல். (ராடிகல் டெமாக்ரடிக் பார்டி)
கே. ஜி. சிவசாமி (பிரஜா உரிமை சங்கம்)
டாக்டர் கே. வி. மேனன் (சோஷலிஸ்டு கட்சி)
இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., (தி. மு. கழகம்)
சொற்பொழிவாற்றுவார்கள்

**அனைவரும் வருக!**

# மாலைவனத்தில் பயிர் விளையும்!

—(6)—

## சகாராவில் 50,000 விளையும் பூமி கண்டுபிடிப்பு

டாஹ்கிட் (சகாரா) பிப். 22—சகாராவின் ஒரு பகுதியான க்யூர் பிரதேசம் கோதுமை, பருத்தி இவை பயிரிட ஏற்றதாக இருக்கிற தென்பது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும் நாடோடிகள் தங்கிச் செல்லும் இடமான இப்பிரதேசம் நிரந்தர வாசஸ்தலமாகிவிடும் என்றும் குனேப் நிருபர் கூறுகிறார்.

அவர் மேலும் கூறுவதாவது:—மேல் எழுந்தவாரியாக பார்த்தபோது காங்கிரீட் போட்டதுபோலத்தான் இப்பிரதேசம் காணப்பட்டது. பின்னர்தான் மொராக்கோவின் நதியான க்யூர் கொண்டுவந்து சேர்த்த வண்டல் மண் அம்மாதிரி படிந்து இறுகி விட்டது என்பது தெரியவந்தது.

விவசாய எஞ்ஜினியர்கள் இந்த மேல்பரப்பைக் கிளறிப்பார்த்தபோது ஈரமுள்ள செழிப்பான நிலம் காணப்பட்டது. இப்பிரதேசத்தைக் கூட்டுப் பண்ணைமுறையில் டிரேக்டர்களைக் கொண்டு பண்படுத்தி உழலாம் என்று சொல்லப்படுகிறது. இப்பிரதேசத்தில் விளையும் உணவுப் பொருள்களைக்கொண்டே சகாராவின் இதர இடங்களில் வெறும் பேரிச்சம்பழங்களை மட்டும் உணவாகக் கொண்டிருக்கும் ஜனங்களுக்கு உணவு சப்ளை செய்யலாம்.

கோதுமையைத் தவிர, பருத்தியையும் இங்கு பயிரிடலாம் என்று கூறப்படுகிறது.

---

## சர்வதேச 'ஸில்க்' காங்கிரஸ்

நியூயார்க், பிப். 22—நியூயார்க்கில் அக்டோபர் மாதத்தில் பட்டு உற்பத்தி, விற்பனை, முதலிய விஷயங்களில் சிரத்தைக் கொண்டவர்கள் அடங்கிய சர்வதேச பட்டுத் தொழில் காங்கிரஸ் நடைபெறவிருக்கிறது. இதில் 32 நாடுகளின் நிபுணர்கள் கலந்துகொள்வர்.

இதில் கலந்துகொள்ளவிருக்கும் நாடுகளாவன: இதாலி, பிரான்ஸ், இங்கிலாந்து, ஸ்விட்ஸர்லாந்து, ஸ்பெயின், பிரேஜில், ஆர்ஜெண்டினா, லெபனன், கிரீஸ், ஸிரியா, துருக்கி, பார்ஸியா, இந்தியா, பாகிஸ்தான், சீனா, ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா, எகிப்து, ஸ்காண்டிநேவிய நாடுகள்.

யூகோஸ்லாவியா, பல்கேரியா, ருமேனியா, இந்தோசீனா ஆகிய நாடுகளுக்கும் அழைப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

## வழுக்கைத்தலை பற்றி அமெரிக்க விஞ்ஞானி

நியூயார்க், பிப். 23—தலையில் வழுக்கை எதனுலேற்படுகிறதென்பதை எதனுலும் தடுக்கமுடியாது என்று, சுமார் 200 பிரபல அமெரிக்க விஞ்ஞானிகள் இரண்டு நாள் முழுவதும், விவாதித்தபின், அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றனர். இம்மாநாட்டின் தலைவர் டாக்டர் ஜேம்ஸ் ஹாமில்டன் முடிவாகப் பேசுகையில், ஆண்களுக்குவழுக்கை மூன்று காரணங்களால் ஏற்படலாம் என்றும் அவை பரம்பரையாக வழுக்கை ஏற்படுவது, வயது முதிர்ந்த காரணத்தினால் ஏற்படுவது, ஆண் 'ஹார்மோன்கள்' அதிகமாகக் காணப்படுவது இக்காரணங்களினுல்தான் என்றும் கூறினர்.

நியூயார்க் சர்வகலாசாலையைச் சேர்ந்த டாக்டர் ஹேரியான் ஸல்ஜ்பெர்ஜர் பேசுகையில், இவர் கூறிய முதல் இரண்டு காரணங்களை அகற்ற வைத்யசாஸ்திரத்திலேயே எதுவும் இல்லை என்றும், மூன்றாவது விஷயம் சிகிச்சை செய்வது ஏற்றதல்லவென்றும் கூறினர்.

—குளோப்

## அணுசக்தியால் சப்மரீன்!

லண்டன், பிப். 22—அணுசக்தியால், ஓட்டப்படும் சப்மரீனைத் தயாரிப்பதற்கான ஏற்பாடுகளை யுனைடெட் ஸ்டேட்ஸ் செய்துவிட்டதாக வாஷிங்டனிலிருந்து திட்டமான செய்தி ஒன்று கிடைத்திருக்கிறது.

அணுசக்தி விஷவாயுசாலைகள் மாலுமிகளைப் பாதிக்காமல் இருப்பதற்கான வழியும் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டதென்றே கூறப்படுகிறது.

### ஈச்சம்பழத்திற்குப்பதில் அரிசி

பாக்தாத், பிப். 22—ஈச்சம்பழத்தைபெற்றுக்கொண்டு அரிசி தருவதாகவும், இவ்விஷயமாக ஒரு உடன்படிக்கையைச் செய்துகொள்ளும்படியும் பர்மா தெரிவித்துள்ள யோசனையை ஈராக் யோசித்துவருகிறது.

---

1950—51-ம் ஆண்டு ரயில்வே அபிவிருத்தித் திட்டத்தில், அறந்தாங்கி—காரைக்குடி ரயில் பாதை அமைக்க 2·16 கோடி ரூபாய் செலவிடப்படும் எனத் தெரிகிறது

## பிரிட்டிஷ் மியூசியத்தில் இந்திய சித்திரங்கள்

லண்டன், பிப். 23—இந்திய வாழ்க்கையைச் சித்தரிக்கும் சலவைக்கல் சித்திரங்கள் மீண்டும் பிரிட்டிஷ் மியூஸியத்தில் இடம் பெற்றிருக்கின்றன.

யுத்த சமயத்தின்போது இவை பூமிக்கடியிலுள்ள சுரங்கம் ஒன்றில் பத்திரமாக வைக்கப்பட்டிருந்தது. இதை இந்திய சர்க்கார் தன்னிடம் திருப்பிக் கொடுத்துவிடும்படி பிரிட்டனை கேட்கலாம் என்று வதந்திகள் இருந்துவருகின்றன. ஆனால் உத்தியோகபூர்வமாக இது வர்ஜிதம் செய்யப்படவில்லை.

## சர்வதேசத் தேயிலை ஒப்பந்தம்

லண்டன், பிப். 23—சர்வதேசத் தேயிலைச் சப்ளையை விநியோகிக்கும் ஒப்பந்தம் ஒன்றில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, இந்தோனேஷ்யா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இங்கு கையொப்பமிடவிருக்கிறார்கள்.

இன்னும் 5 வருஷ காலத்திற்கு இப்பொழுதுள்ள உடன்படிக்கை நீடிக்கப்படலாம் என்று தெரிகிறது.

## கெய்ரோவில் மாநாடு

கெய்ரோ, பிப். 22—கெய்ரோவில் யுனைடெட் ஸ்டேட்ஸ் மத்ய கிழக்கு ராஜதந்திரிகள் மாநாடு மார்ச் மாதம் 7-ந் தேதி முதல் 11-ந் தேதி வரை நடைபெறும் என்றும், அதற்கு தான் தலைமைவகிக்கப்போவதாகவும் எகிப்திலுள்ள யு. எஸ் ஸ்தானிகர் ஜப்பர்ஸன்காப்ரி அறிவித்தார்.

## கர்நாடக மாவட்ட (மைசூர் சமஸ்தானம்) தி. மு. க. அமைப்புக் கூட்டம்

கன்னடம் பகுதி திராவிட முன்னேற்றக் கிளைக் கழகத் தோழர்களே! மேற்படி கர்நாடக (மைசூர் சமஸ்தானம்) மாவட்ட மத்திய திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் கோலார் தங்கவயல் தி. மு. கழகச் சார்பாக நடைபெறும். அதுசமயம் தி. மு. கழகத் தலைமை நிலைய அமைப்பாளர் தோழர் என். வி. நடராசன் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமைவகிப்பார். தோழர் கே. ஏ. மதியழகன் அவர்களும் கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, கிளைக் கழகத் தோழர்கள் கழகம் ஒன்றுக்கு இரண்டு பிரதிநிதிகள் வீதம் அனுப்ப கேட்டுக்கொள்கிறேன்.

இடம்:—கோலார் தங்கவயல் தி. மு. கழக மனை

காலம்:—26-2-50 ஞாயிறு மாலை 4-மணி.

டி. கே. சின்னத்துரை,
விளம்பர உறுப்பினர்.
கோலார் தங்கவயல் தி.மு.க.

## சி. வி. இராசன்

சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக விளம்பர உறுப்பினர் தோழர் சி. வி. இராசன் அவர்கள், இருதயநோய் காரணமாக, சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில், சென்ற ஒருவார காலமாக சிகிச்சை பெற்று வருகிறார். இன்னும் சில நாட்களில் முற்றும் குணமடையப்பெற்று, அவர் வெளி வந்துவிடலாம் என்று டாக்டர்கள் கூறுகிறார்கள். அவர் தோற்றத்தில் தளர்ச்சி காணப்படவில்லை. உணவு வகைகள் நன்கு உண்டு வருகிறார்.

## அறிவிப்பு

தேனூர் (வ-ஆ) 'மாலை மணி' விற்பனையாளராகத் தோழர் ஆர். ஏ. மாதவன் நியமிக்கப்பட்டுள்ளார்.

நிர்வாகி "மாலை மணி"

# ★ நாட்டு நடப்பு ★

## தமிழர் திருநாள்

இலால்குடி, பிப். 12—இவ்வூர் ஐகதாம்பிகை உணவு விடுதியின் இலக்கியக்கழகத்தின் சார்பில் உயர்நிலைப்பள்ளியில் தமிழர் விழா 11-2-50ல் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கூட்டத்திற்கு "தமிழர் நாடு" ஆசிரியர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்கள் தலைமைதாங்கி "தமிழர் நன்னாள்" என்பதைப்பற்றி சுமார் 2·30 மணி நேரம் சொற்பொழிவாற்றினர்.

சொற்பொழிவின்சுருக்கமாவது:-மேனாட்டுக் கல்வியை நம் நாட்டுடன் ஒப்பிட்டு சுதந்திரம் அடைந்தும் நாம் நமது கல்வியில் வளர்ச்சி காட்டாதது மிகவும் வருந்தத்தக்க செயல் என்றும், ஒவ்வொரு மாணவனும் தன் மொழியை அவசியம் கற்கவேண்டுமெனவும், தாய் நாட்டின் பற்று ஒவ்வொரு மாணவன் உள்ளத்திலும் ஏற்படவேண்டுமென்றும், எல்லா இளைஞர்களும் எல்லா மொழிகளைக் கற்றாலும் தமிழ்த்தாய் திருவடிகளில்வைத்து வணங்கவேண்டுமென்றும், ஆளும், அரசாங்கத்தார் குறிப்பிட்ட மொழியை வலுவில் மாணவரின் உள்ளத்தில் நுழைக்கக்கூடாதென்றும் விளக்கமாக எடுத்துரைத்தார்.

தலைவர் மேலும் பேசுகையில், ஒருவன் தன் மனைவியிடம் உயர்ந்த விமானம் ஒன்று உலகை சுற்றவும், மற்றொரு விமானம் இந்தியாவைச் சுற்றவும் வாங்க வேண்டும் என்று தனது மனைவியிடம் தெரிவித்தானும். அதற்கு மனைவி உலகத்தைச் சுற்றும் விமானம் சொன்டே இந்தியாவைச் சுற்றிவிடலாமே. இது கூட கணவன் பகுத்தறிவுக்குத் தெரியவில்லையே என மனைவி சிரித்தது போல வாடிக்கையாளரும், இதே நிலையில் இந்தியாவில் அரசாங்கத்தார் உலகுக்கு ஒரு மொழியாக ஆங்கிலம் இருக்க வேண்டும் என்பதை ஒப்புக்கொண்டாலும். இந்தியாவுக்கு ஒரு மொழியாக இந்தி இருக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துகின்றனர். மேலும் அவர் கூறுகையில், தமிழர்களுக்கு ஆண்டின் தொடக்கநாள் தைத்திங்கள் முதல் நாள் என்றும், தமிழர்களின் வீரம், பண்பு, கலை, நாகரிகம், இயல், இசை, நாடகம் என்பவைபற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். திருக்குறளிலிருந்து ஏராளமான மேற்கோள்கள் காட்டி, வள்ளுவர் இரண்டாயிர வருடங்களுக்கு முன்னரே இப்பொழுது நடக்கும் நிகழ்ச்சிகளைத் தீட்டி வைத்துள்ளார் என்றும், தலைவர் இறுதியாகப் பேசுகையில் எல்லா மாணவர்களும் திருக்குறளைஅவசியம் படிக்க வேண்டும். அப்படிப் படிக்காத மாணவன் அவன் மாணவனாகக் கருதப்படமாட்டான் எனவும், தாய்மொழியின் அவசியத்தைப் பற்றியும் பேசினர். கழகத்தின் செயலாளர் அ. ந. சிதாராமன் நன்றி கூற கூட்டம் இனிது கலைந்தது. (ந. சி)

## இளைஞர் முன்னேற்றக் கழகம்

எட்டயபுரம்:—5-2-50 ஞாயிறு அன்று இவ்வூர் தோழர் எம். ராமகிருஷ்ணன் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடந்தது. தோழர் கலிங்கன் அவர்கள் திராவிடர் நிலை பற்றியும், திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர வேண்டிய அவசியம் பற்றியும், சுமார் ஒன்றரை மணி நேரம் பேசினர். பின் "இளைஞர் முன்னேற்றக் கழகம்" அமைக்கப்பட்டது.

நிர்வாகிகள் :—தலைவர் :—ராமகிருஷ்ணன், துணைத் தலைவர்:—முத்துவேல், செயலாளர் :—எஸ். சுப்பையா, துணைச் செயலாளர்:-சு. வி. மகாலிங்கம், பொருளாளர்:-சிவகுருநாதன் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தி. மு. க. வுடன் ஒத்துழைத்து வேலை செய்வதென்றும், பொதுச்செயலாளர் தோழர் அண்ணாதுரை எட்டயபுரம் வரும் பொழுது ஒரு வரவேற்பிதழ் தருவதெனவும் முடிவு செய்யப்பட்டது

## வள்ளுவர் மன்றம்

உறந்தை—இவ்வூர் வள்ளுவர் மன்றத்தின் திருக்குறள் தேர்வு செயற்குழு மன்றத்தில்கூடி, கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றியது.

திருக்குறள் தேர்வு, கட்டுரைப் போட்டியாக வைப்பது என்றும், தேர்விற்குக் கட்டணமின்றி யாவரும் அனுமதிக்கப்படுகிறார்களென்றும், சிறந்த முதல் மூன்று கட்டுரைகளுக்குப் பரிசுகள் முறையே ரூ. 15, 15, 10. பெறுமானமுள்ள புத்தகங்கள் வழங்குவதென்றும், கட்டுரைகள் முழுத்தாள் அளவில் 3 பக்கங்களுக்கு மிகாமல் கீழ்க்காணும் தலைப்புகளில் ஏதாவது ஒன்றை எழுதி மன்றச் செயலாளருக்கு ஏப்ரல் 30 தேதிக்குள் கிடைத்துவிடச் செய்ய வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. தலைப்புகள் விவரம் 1 வள்ளுவர் பொருளாதார நிபுணர், 2 வள்ளுவர் வகுத்த அன்பு நெறி, 3 வள்ளுவர் சர்வாதிகாரியானல்...? தேர்வைப்பற்றிய விவரம் விளக்கமாக பின்னர் அறிவிக்கப்படும். மன்றத்தின் தலைவர் திரு வே. மாணிக்கம்பிள்ளை அவர்கள் நன்றிகூறக் கூட்டம் முடிவுற்றது.

## வாலாஜாபாத் பாடசாலை

வாலாஜாபாத், பிப். 16—கிழம்பாக்கம் காந்தி ஆசிரமத்தில் ஆதாரக் கல்வி ஆசிரியப் பயிற்சியைப் பெற்றுக் கொண்டிருக்கும் ஆசிரியர்களும், மாணவர்களும் 43 பேர் இந்நகர பாடசாலைக்கு வந்தார்கள். தலைமை ஆசிரியை ஆர். இராஜலட்சுமி அம்மாள் எம், ஏ., எல். டி., அவர்களும் எஸ். வெங்கடேசன் அவர்களும் உடன் வந்தார்கள். பாடசாலையையும், மாணவர் இல்லத்தையும் பார்த்து மகிழ்ந்தார்கள். மாணவர்களுக்குத் தேவையான பொது அறிவு சம்பந்தமான பலவித செய்திகள் பள்ளிக்கூடத்தின் சுவர்களில் எழுதப்பட்டிருப்பதைப் பாராட்டினார்கள். மாணவர்களுடைய உடற்பயிற்சிகளையும், பேச்சு, பாட்டு, நடிப்பு முதலியவற்றின் பயிற்சிகளையும் நேரில் பார்த்து மகிழ்ந்தார்கள். பாடசாலையின் செயலாளர் திரு. வா. தி. மாசிலாமணி (முதலியார்) அவர்கள் ஆசிரியர்கள் எல்லோருக்கும் வரவேற்பும், நன்றி உரையும் கூறினார்கள்.

## முத்தமிழ் வளர்ச்சிக் கழகம்

பொள்ளாச்சி, பிப். 20—நேற்றிரவு இக்கழகத்தின் செயற்குழு உறுப்பினர் கூட்டம், தலைவர் தோழர் வி. கே. பழனிச்சாமிக் கவுண்டர் தலைமையில் நடைபெற்று கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. ஈரோட்டு வைத்திய வள்ளல் ஈ. வே கிருஷ்ணசாமி அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

2. கழகத்தின் 5 வது ஆண்டு நிறைவு விழாவை வரனும் 26-2-50ல் தோழர் ஜெம்ஸ் தலைமையில் நடத்தவும், தமிழ்க்கொடியேற்று விழாவிற்கு வழக்கறிஞர் தோழர் வி. கே. கந்தசாமி அவர்களை அழைக்கவும் அன்று ஆண்டு விழாவை முன்னிட்டு "இழந்த காதல்" நாடகமும் நடத்தவும், 1-3-50ல் திருப்பூர் நகரசபைத் தலைவர் தோழர் கே. என். பழனிச்சாமிக் கவுண்டர் தலைமையில் "மறுமணம்" நாடகம் நடத்தவும், 3-3-50ல் "விதியின் விளையாட்டு" நாடகம் பொள்ளாச்சி நகரமன்ற ஆணையர் தோழர் கெ. தி. அரங்கவடிவேல் பி. ஏ. பி, எல். அவர்கள் தலைமையில் நடத்தவும் முடிவு செய்யப்பட்டது. மற்றும் பல தீர்மானங்களுடன் கூட்டம் முடிவுற்றது.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1